Deposition of Witness
(Chapter XXV BNSS )
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.
Case No. STC .No. 175 /2019
DEPOSITION OF ACCUSED SIDE WITNESS –1

| | | | |
|---|---|---|---|
| Name: | பிரேம்குமார் | Calling: | விவசாயம் |
| Father's Name: | மனோகரன் | Religion: | |
| Village: | சம்மந்திக்குப்பம் | Age: | 38 |
| Taluk: | ஆம்பூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of BSA 2023 Dated : 03.02.2026 நேரம் : 06.15 PM

கு.சா.த.சா.1 முதன்மை விசாரணை.

நான் இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர் ஆவேன். புகார்தாரரை தெரியும். எனக்கு பங்காளி உறவு முறை. 2018 ம் வருடம் மே மாதம் எனது அம்மாவிற்கு கர்ப்பபை அறுவை சிகிச்சை நடந்தது. அதனால் புகார் தாரரிடம் அவ்வபோது 10000,20000,50000 என மொத்தமாக ரூ.3 லட்சத்தை கடனாக வாங்கினேன். மூன்று மாதத்தில் திருப்பி தரமுடியவில்லை. அதனால் பிணையமாக எதாவது கொடுக்கும் படி சொன்னார். நான் எனது அம்மாவின் பேரில் உள்ள காசோலையை கொடுத்தேன். அதற்கு அது வேண்டாம் உன் பேரில் உள்ள காசோலையை கொடு என்று கேட்டார். நான் எனது ஆம்பூர் இந்தியன் வங்கி கணக்கு மூலம் காசோலை விண்ணப்பம் செய்து மொத்தமாக 100 செக் லீப் வாங்கினேன். அதில் ஏழு காசோலைகளை கையொப்பம் மட்டும் செய்து புகார் தாரரிடம் கொடுத்தேன். ஒரு மாதம் கழித்து ரூ.3 லட்சத்தை நான் புகார் தாரரிடம் எனது சித்தப்பா ரவி என்பவரின் கொடுத்துவிட்டேன். நான் கொடுத்த காசோலையை திருப்பி கேட்டபோது இப்போது தருகிறேன், அப்போது தருகிறேன் என தரவில்லை. அதன்பிறகு தான் வழக்கறிஞரிடம் இருந்து அறிவிப்பு வந்தது. அதை நான்வாங்கவில்லை.

பிறகு வடசேரி போஸ்ட் ஆபீஸ்ல் இருந்து போன் செய்து என்னை கையொப்பம போட்டு வாங்கவேண்டும் என்று அங்கு வர சொன்னார்கள். அதை வாங்க போகும் போது தான் நீதிமன்றத்தில் இருந்து அழைப்பானை வந்தது பற்றி எனக்கு தெரியும். அவரிடம் இருந்து இதைப்பற்றி கேட்டதற்கு சரியான பதில் வரவில்லை. இதைக்குறித்து வாணியம்பாடி காவல் நிலையத்தில் புகார் கொடுக்க சென்றேன். நீதிமன்றத்தில் இருந்து அழைப்பானை வந்ததால் ஒன்றும் செய்யமுடியாது என்று கூறிவிட்டார்கள். வழக்கு தாக்கல் செய்துள்ளவாறு ஒரு கோடியே ஐம்பது லட்சம் ரூபாயை நான் வாங்கவில்லை. அதைக்கொடுக்கும் அளவிற்கு அவருக்கு நிதித்திறனும் இல்லை. வாட்ச்ஆப் மூலம் ஒருகோடியே இருபத்து ஐந்து லட்சம் ரூபாயை நான் கொடுப்பதாக மெசேஜ் அனுப்பவில்லை. என் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

சாட்சி கையொப்பம்
(ஓம்.) பிரேம்குமார்

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K
Date: 2026.02.05 19:00:36 +0530